புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • செப்டம்பர் (SEPTEMBER) 03, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 36 • விலை(PRICE) ரூ.6.00

# இந்தியாவுக்கு அய்.நா. கண்டனம்

## ஜாதியும் இனப்பாகுபாடுதான்; உள்நாட்டுப் பிரச்சனை அல்ல!

"மனிதர்கள் அனைவருமே சமமாக முடியாது; பிறப்பிலேயே கடவுள் உருவாக்கியிருக்கிறார். இந்தப் பாகுபாடுகளை ஏற்றுக்கொண்டு வாழப் பழக வேண்டும் இந்த வாழ்க்கை தர்மம் தான் நமது சனாதனம்" இதுதான் சனாதன நெறிமுறை என்கிறது பார்ப்பனியம்.

வேற்றுமையில் ஒற்றுமை என்கிறார் ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத். வேற்றுமை என்பது இவர்கள் பூசி மெழுகி ஏமாற்றும் சொல். 'பிராமண' அர்ச்சகர்களையும் தூய்மைப் பணியாளர்களையும் வேற்றுமை என்ற அடையாளத்திற்குள் கொண்டுவர முடியுமா? நிச்சயமாக முடியாது. இதற்குப் பெயர் பாகுபாடு (Discrimination).



THE HINDU

State of exception

India must not normalise a culture of discrimination

In its first review by the U.N. Committee on the Elimination of Racial Discrimination (CERD) since 2007, India has elicited an expression of "grave concern" about reports of the law enforcement apparatus resorting to violence – physical and otherwise – against minority ethnic and ethno-religious groups, Dalits, and non-citizens over the years. The Committee also noted that India, which ratified the International Convention on the Elimination of All Forms of Racial Discrimination in 1968, has not provided detailed and updated information about the ...ate's inquiries and sanctions arising from ... of such violence. While the gove... ...ERD that caste bias falls ...

வெள்ளையர்கள் கருப்பர்களை ஒதுக்கி வைத்தது பாகுபாடு. 'பிராமணர்'கள் உயர் பிறவிகள்; 'சூத்திர, பஞ்சமர்'கள் இழி பிறவிகள் என்பது பாகுபாடு.

மனிதர்களுக்குள் திணிக்கப்படும் பாகுபாடுகள் ஒழிக்கப்பட வேண்டும் என்பது சர்வதேச சட்டம். இனப் பாகுபாடுகளை ஒழிக்கும் அமைப்பு (Committee on the Elimination of Racial Discrimination-CERD) 1968-ல் அய்.நாவில் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு நாட்டையும் கண்காணித்து வருகிறது. இந்த சர்வதேச உடன்பாட்டில் இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளது.

இனப் பாகுபாடு ஒழிப்பு செயல்பாடுகள் குறித்து விரிவான அறிக்கையை அய்.நா-வுக்கு அனுப்ப வேண்டியது உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள அனைத்து நாடுகளின் கடமை. இதைத் தொடர்ந்து 2007-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவில் நிலவும் இனப்பாகுபாடுகளை அய்.நா இப்போது முதன்முதலாக ஆய்வுக்கு உட்படுத்தி உள்ளது. அதன் அடிப்படையில் கடுமையான குற்றச்சாட்டுகளை இந்தியாவின் மீது சுமத்தியுள்ளது. ஆய்வு அறிக்கைகளை அனுப்ப இந்தியா அலட்சியம் காட்டுவதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

கழிவு நீர் குழிகளுக்குள் சென்று மனிதர்கள் சுத்தம் செய்வது, இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சு, அவர்களின் மோசமான வாழ்க்கை நிலை, குடியுரிமை திருத்தச் சட்டம், வாக்காளர் பெயர் பட்டியலில் பெருமளவு பெயர் நீக்கம், குடிமக்கள் உரிமைகளைப் பறிக்கும் UPA,FCRA,FSPA, and PMLA போன்ற சட்டங்கள் தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் கலந்து ஆலோசிக்கும் ஜனநாயக நெறிமுறைக்கு எதிராக தன்னிச்சையாக அமலாக்கப்படுவதை அய்.நா. சுட்டிகாட்டி விமர்சித்துள்ளது. அய்.நா வகுத்துள்ள பாகுபாடுகள் என்ற வரையறைக்குள் இந்தச் செயல்பாடுகள் வருகின்றன என்று அய்.நாவின் அறிக்கை கூறுகிறது.

ஜாதித் தீண்டாமை அடிப்படையிலான பாகுபாடுகளை அய்.நா.வின் இனப் பாகுபாடு கருத்துக்குள் கொண்டுவர முடியாது என்று இந்திய பார்ப்பனிய ஆட்சி முன்வைத்த வாதங்களை அய்.நா-வின் பாகுபாடு ஒழிப்புக் கமிட்டி ஏற்க மறுத்துவிட்டது.

பிறப்பின் அடிப்படையில் மரபு வழியாக பின்பற்றப்பட்டு சமூக ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்தும் ஜாதி என்ற அமைப்பு இனப் பாகுபாடு தான் என்று அய்.நா திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. அதே போல் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் நோக்கத்தை சிதைத்து அதை காவல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்திருப்பதையும் அய்.நா சுட்டிக்காட்டி இருக்கிறது.

தேசிய மனித உரிமை ஆணையத்தின் சுதந்திரத்தை மீட்டெடுக்க வேண்டும்; வெறுப்புப் பேச்சைத் திரித்தலுக்கு இடம் தராமல் தெளிவான குற்றமாக்க வேண்டும்; பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவான உறுதியான நடவடிக்கைகளை (affirmative action) மேற்கொள்ள வேண்டும்; சமூகங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட புள்ளிவிவரங்களை முறையாகச் சேகரித்து வெளியிட வேண்டும்; வாக்காளர் பட்டியல் திருத்தங்களின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்த வேண்டும்; மேலும், ஒட்டுமொத்தமாக சட்ட அமலாக்கத்தின் திறனையும் பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்த வேண்டும்.

ஆனால், சுமார் 20 கோடி தலித் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை 'உள்நாட்டு விவகாரம்' என்ற பொருத்தமற்ற காரணத்தைக் கூறி சர்வதேசப் பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிக்க அரசு முயல்கிறது; சர்வதேச அமைப்பின் இந்த உண்மையான கவலைகளை அரசியல் நோக்கம் கொண்டவை என்று நிராகரிக்கிறது. இந்தியாவின் இந்த அலட்சியம் தொடருமானால், இதனால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகப்போவது இந்திய குடிமக்கள்தான் என்று அய்.நாவின் அறிக்கை கூறுகிறது.

**(ஆதாரம்: ஆகஸ்ட் 31,2026 இந்து ஆங்கில நாளேட்டின் தலையங்கம்)**

# அனிதா நினைவுநாளில் உறுதியேற்பு!

## 'கல்வி உரிமைகளை மீட்டெடுப்போம்'

நீட் எதிர்ப்புக்கு உயிர்ப்பலி தந்த அனிதாவின் 9-ஆம்ஆண்டு நினைவு நாள் செப்டம்பர்-1ம் தேதி மாலை 5.30 மணி அளவில் பெரியார் திடலில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் நீட் ஒழிப்புக்கான உறுதி ஏற்பு நாளாக நடைபெற்றது.



நீட் எதிர்ப்புக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு மாணவர் இளையோர் கூட்டமைப்பின் சார்பில் சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் இந்த நினைவு நாள் திட்டமிடப்பட்டது. கடைசி நேரத்தில் காவல்துறை அனுமதி மறுத்ததால் திராவிடர் கழகத்தின் தலைமையிடமான பெரியார் திடலுக்கு மாற்றப்பட்டது.

பெரியார் சிலை அருகே வைக்கப்பட்டிருந்த அனிதாவின் படத்திற்கு தலைவர்கள் பலரும் மெழுகுவர்த்தி ஏந்தி வீரவணக்கம் செலுத்தினர். ஆசிரியர் கி.வீரமணி, நடிகர் சத்யராஜ் வீரவணக்க உரையாற்றினர். நீட் எதிர்ப்பையும் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றவும் தொடர்ந்து போராடுவோம் என்ற உறுதி மொழி ஏற்கப்பட்டது. தோழர் தியாகு உறுதிமொழியைப் படித்தார். நிகழ்வில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமை நிலையச் செயலாளர். தபசி குமரன், சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், சட்டமன்ற உறுப்பினர் தமிமுன் அன்சாரி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது, அற்புதம் அம்மாள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொறுப்பாளர் வழக்கறிஞர் ரஜினிகாந்த் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் தோழர்கள் பங்கேற்றனர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நன்றி கூறினார்.

சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் காவல்துறை தடையை மீறி திட்டமிட்டபடி நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி தலைமையில் கழகத் தோழர்களும், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் பேரன்பு, நீட் எதிர்ப்பு கூட்டமைப்பைச் சார்ந்த அனிதாவின் சகோதரர் மணிரத்தினம் உள்ளிட்ட தோழர்களும் பங்கேற்று வீரவணக்கம் செலுத்தி உறுதிமொழி ஏற்றனர்.

காலை 10:30 மணிக்கு, நினைவேந்தல் நிகழ்வு, சென்னை ராயப்பேட்டை பத்ரிநாராயணன் பெரியார் படிப்பகத்தில், தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு தலைமையில், மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் குடிஅரசு முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மருத்துவர் அனிதாவின் சகோதரர் மணிரத்னம் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், அருண் இளைஞரணி அமைப்பாளர் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

# செங்கொடிக்கு கழக சார்பில் வீரவணக்கம்; பேரறிவாளன் பங்கேற்றார்!

தோழர் செங்கொடியின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை, ஆக-28, அன்று மாலை 6 மணிக்கு சென்னை ஷெனாய் நகர் வைத்தியநாதன் தெருவில், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வ. வேலு ஒருங்கிணைத்தார்.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் மா. வேழ வேந்தன், மாவட்ட அமைப்பாளர் ந. தட்சிணாமூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் இராவணன், தோழர்கள் சிகாமணி, அசோக், சுரேந்தர் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பாக, தோழர்கள் ஷர்மிளா, குடிஅரசு (மாவட்ட அமைப்பாளர்) ஆகியோர் பங்கேற்றனர். இந்நிகழ்வில் தோழர் பேரறிவாளன் பங்கேற்றார்.



தலையங்கம்

## நீதிபதியின் துணிவானக் கருத்து

உச்ச நீதிமன்றத்தைக் கண்காணிக்க சிறப்பு அதிகாரம் கொண்ட நிபுணர்கள் குழு ஒன்றை (Distinguished Jurists) குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதி உஜ்ஜல் புயான் பேசி இருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒன்றாகும். குடியரசுத் தலைவருக்கு சட்டம் இந்த உரிமையை வழங்கி இருக்கிறது என்றாலும், 76 ஆண்டு காலமாக இதுவரை அப்படி ஒரு நியமனம் நடக்கவில்லை என்று நீதிபதி புயான் புதுதில்லி தேசிய பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசியிருக்கிறார்.

இந்த உரை நிகழ்த்தப்பட்ட சூழல் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஜி.கே.அய் சூரியகாந்த் இளைஞர்களைக் கரப்பான் பூச்சிக்கு ஒப்பிட்டுக் கூறிய கருத்துக்கு இளைஞர்கள், மாணவர்களிடையே எதிர்ப்புகள் வெடித்துக் கிளம்பின. இதைத் தொடர்ந்து அய்தராபாத்தில் உள்ள நெல்சார் சட்டப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தலைமை நீதிபதி அழைக்கப்பட்டதற்கு, மாணவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். தலைமை நீதிபதி நிகழ்ச்சிக்கு வரவில்லை. உடனே வழக்கறிஞர்களின் அமைப்பான பார் கவுன்சில் படித்து முடித்த நெல்சார் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்குவதற்கு தடை விதித்தது. கடும் எதிர்ப்புக்குப் பிறகு பார்கவுன்சில் தனது தடையைத் திரும்பப் பெற்றது. இந்தச் சூழ்நிலையில் தான் உஜ்ஜல் புயான் இந்தக் கருத்துகளை வெளிப்படுத்தினார்.

‘‘சகிப்புத்தன்மை என்பது தனி மனிதர் பண்பு என்று சுருக்கிவிட முடியாது. அது சட்டத்திற்கான மதிப்பு; அனைவரும் ஒரே கருத்தை பேசுவது ஜனநாயகம் அல்ல, மாற்றுக் கருத்துக்களும் மதிக்கப்பட வேண்டும்’’ என்றார்.

நீதித்துறை தனது வெளிப்படைத் தன்மையை முற்றாக இழந்து நிற்பதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆர்.எஸ்.எஸ் கருத்தியலில் நம்பிக்கை கொண்டவர்களும், பார்ப்பன உயர்ஜாதியினருமே நீதிபதிகளாக நியமிக்கப்பட்டு வருகிறார்கள். நீதிபதிகளைத் தேர்வு செய்யும் கொலிஜியம் என்ற அமைப்பை சட்டம் உருவாக்கவில்லை; நீதிமன்றங்களே உருவாக்கிக் கொண்டன.

காலிப் பணியிடங்கள் குறித்தோ, தகுதி குறித்தோ, தேர்வு முறை குறித்தோ எந்த அறிவிப்புகளும் இல்லாமல் மர்மமாகவே நீதிபதி நியமனங்கள் நடக்கின்றன. நீதித்துறையில் இடஒதுக்கீடு இல்லை; பார்ப்பன உயர்ஜாதி ஆதிக்கம் தான் தலைவிரித்தாடுகிறது. சென்னை உயர்நீதிமன்றத்தில் பார்ப்பனர்களுடைய எண்ணிக்கை 10 ஆக உயர்ந்து விட்டது.

ஒன்றிய ஆட்சியின் சி.பி.அய் அமலாக்கத்துறை போன்ற துறைகளில் வழக்கறிஞர்களாக இருந்தவர்கள் நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளனர். தலித், முஸ்லிம், பெண்கள் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது. ஆர்.எஸ். எஸ் கொள்கைகளுக்காக சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்துகிறார்கள். பதவியில் இருக்கும் நீதிபதிகள் தங்கள் உறவினர்களைப் பரிந்துரைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. உயர்நீதிமன்ற நீதிபதிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் உறவுக்காரர்கள் (Uncle Judges) என்று முன்னாள் தலைமை நீதிபதி ஆர்.எம் லோதா வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். இது குறித்து ‘இந்து ஆங்கில’ நாளேட்டில் ஆகஸ்ட்-26 2026 வெளிவந்த கட்டுரையில் அதிர்ச்சியான தகவல்கள் இடம்பெற்றிருந்தன.

2018 அலகாபாத் உயர்நீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைத்த 33 நீதிபதிகளில் 11 பேர் ஓய்வுப் பெற்ற நீதிபதிகளின் உறவினர்கள்; இவர்களைத் தான் ஒன்றிய ஆட்சி தேர்வு செய்தது. 2025 ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதிபதிகளில் 30 விழுக்காட்டினர் (33 நீதிபதிகளில் 10 பேர்) முன்னாள் நீதிபதிகளின் உறவினர்கள் என்பது கண்டறியப்பட்டது. இதன் பிறகுதான் நீதிபதிகள் உறவினர்களுக்காக வழங்கும் பரிந்துரைகளை ஏற்கக்கூடாது என்று முடிவு எடுக்கப்பட்டது.

நீதிபதி நியமனங்கள் பின்வாசல் வழியாக நியமிக்கப்படக் கூடாது; அது வெளிப்படையாக இருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அரசு ஊழியர்களும், அதிகாரிகளும் வெளிப்படையாக தேர்வு செய்யப்படும் போது நீதிபதிகள் தேர்வு மட்டும் ஏன் ரகசியமாக நடக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கேட்டது. (கர்நாடகா எதிர் உமாதேவி வழக்கு 2006). தலைமை நீதிபதியின் அலுவலகம் தகவல் பெறும் உரிமைச் சட்டத்துக்கு கட்டுப்பட்டது என்றும் உச்சநீதிமன்றம் 2019-ல் தீர்ப்பளித்திருக்கிறது. (சி.பி.அய்.ஒ எதிர் சுபாஷ் சந்திரா அகர்வால் வழக்கு)

பிரிட்டன், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் நீதிபதி தேர்வு ஆணையங்கள் வழியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தொலைக்காட்சி வழியாக நேர்முகப் போட்டிகளை நடத்தி நீதிபதிகள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.பார்ப்பன ஆதிக்கத்தில் நீதிமன்றங்கள் செயல்பட்டதால் இத்தகைய வெளிப்படைத் தன்மைகள் முற்றாக புறக்கணிக்கப்பட்டன என்பதே உண்மை.

அய்.ஏ.எஸ், அய்.பி.எஸ் தேர்வுகளைப் போல் அகில இந்திய தேர்வுகள் வழியாக நீதிபதிகள் தேர்வு நடைபெற வேண்டும் என்று பிரதமராக இருந்தபோது சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் விரும்பினார். ஆனால் அவர் பதவியில் தொடர்ந்து நீடிக்க முடியாமல் போய்விட்டது. இந்தப் பின்னணியில் உச்ச நீதிமன்றம் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்று நீதிபதி உஜாய் புயான் வெளியிட்ட கருத்து மிகவும் புரட்சிகரமானது; வரவேற்றுப் பாராட்ட வேண்டியதாகும்.

# பெரியார், அம்பேத்கர் பெயர்கள் இருட்டடிப்பின் பின்னணி என்ன?

*பிற்படுத்தப்பட்டோருக்கான கொள்கைக் குறிப்பேட்டில் பெரியார், அம்பேத்கர், நேருவின் பெயர்கள் இடம்பெறாமல் போனது ஏன்? இது திட்டமிட்டு மறைக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் இந்த குறிப்பேட்டைப் படித்தாரா? அப்படி படித்திருந்தால் இது விடுபட்டது ஏன் என்று கேட்டாரா? எதிர்க்கட்சிகள் கேட்டதற்குப் பிறகு இந்த உண்மை வெளியே வந்திருக்கிறது.*

*இதற்கு நான் பொறுப்பேற்கிறேன். மீண்டும் புத்தகங்கள் அச்சடிக்கப்படும் என்ற ஒரு காரணத்தை இப்போது கூறுகிறார். இவர்கள் ஏற்றுக் கொண்டதாக கூறிக் கொண்டிருக்கும் கொள்கைத் தலைவர்களுக்கே இந்த நிலை;*

*நிர்வாகத்தில் ஏதோ திட்டமிட்ட சதிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. மோடி இடதுசாரிகளுக்கு குறி வைத்துக் கொண்டிருப்பது போல் தமிழ்நாட்டில் கல்லூரிகளில் மாணவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலும், கரப்பான் பூச்சி ஜனதா கட்சியிலும் சேராமல் தவிர்க்க வேண்டும் என்று அரசாணை வெளியிட்டது யார் ?*

*மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களைக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அரசாணை வெளியிட்டது யார்? இதற்குப் பின்னால் என்ன சதி நடக்கிறது?*

*குறிப்பாக தலைமைச் செயலாளர் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக செய்திகள் வந்ததற்குப் பிறகும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய செயலாளர் தோழர் சண்முகம் தலைமைச் செயலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் நிலையில், தமிழக முதலமைச்சர் இதை காதில் வாங்கிக் கொள்ளாமல் அலட்சியப்படுத்துவது அதிகார ஆணவமும் அவமதிப்புமாகவே கருத வேண்டி இருக்கிறது. இத்தனைக்கும் ஆட்சிக்கு ஆதரவு கொடுப்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. சமூக நீதித்துறையின் கொள்கை குறிப்பேட்டில் அருந்ததியர் என்ற பெயரே இடம்பெறவில்லை என்பதை சட்டமன்றத்தில் திமுக உறுப்பினர் வேலு அவர்கள் சுட்டிக் காட்டிய பிறகும் அமைச்சரிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை.*

*திமுக ஆட்சியில் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிய 10 இஸ்லாமிய மாணவர்கள் வெளிநாடுகளில் சென்று படிப்பதற்காக ஒவ்வொருவருக்கும் 36 லட்சம் ரூபாய் வழங்கும் திட்டத்தை இப்போது நிறுத்தி வைத்திருப்பது ஏன்? இதற்கான அரசாணை வெளியிடுவதை தொடர்ந்து தாமதப்படுத்துவது ஏன் ?*

*இதைவிட இப்போது மற்றொரு அரசாணை குறித்த அதிர்ச்சியான செய்தியும் வெளிவந்திருக்கிறது. அரசுத் தேர்வாணையத்தில் தமிழ் வழி பயிலும் மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு உரிமைக்காக இந்த ஆட்சி வெளியிட்ட ஆணையில் குளறுபடிகளைச் செய்துள்ளது.*

*இது திமுக ஆட்சி ஆணையில் இருந்து முற்றிலும் வேறுபட்டு இருக்கிறது. முன்னுரிமை கோரும் தமிழ் வழி கல்விக்கான சான்றிதழை மாணவர்கள் ஒரு முறை மட்டும் தான் பயன்படுத்த முடியும். ஒரு வேளை குரூப்-4 தேர்வில் வெற்றி பெற்று பிறகு அதே மாணவர் குரூப்-1 தேர்வையோ அல்லது வேறு பிரிவு தேர்வையோ எழுத வேண்டும் என்று விரும்பினால் அப்போது இந்த தமிழ் வழி கல்வி ச்சான்றிதழை பயன்படுத்த முடியாது. ஒரு முறை மட்டுமே பயன்படுத்த முடியும் என்று அரசாணை கூறுவதாக இப்போது செய்திகள் வந்திருக்கிறன. தமிழ்நாடு அரசுப் பேருந்துகளில் நடத்துனர்களாகப் பணியாற்றுவதற்கு உத்தரப்பிரதேச நிறுவனம் ஒன்றுடன் இந்த ஆட்சி ஒப்பந்தம் போட்டு இருக்கிறது. இதை எதிர்த்து சென்னையில் தமிழ் அமைப்புகள் போராட்டங்களை அறிவித்திருக்கின்றன.*

*ஆக தமிழ்நாட்டில் ஓடும் பேருந்துகளில் வடநாட்டுக்காரர்கள் நடத்துனர்கள் ஆகப் போகிறார்கள். தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்பு பறிக்கப்படுகிறது. இந்த ஆணைகள் எங்கிருந்து பிறப்பிக்கப்படுகின்றன ?*

*இந்த அனைத்து அரசாணைகளிலும் ஒன்றை முக்கியமாக கவனிக்க வேண்டும் அனைத்தும் பாஜக சங்கிகளின் பார்வையோடு பிறப்பிக்கப்படுகின்றன. இதை மடைமாற்ற திமுகவோடு மோதல் போக்குகளை திட்டமிட்டு உருவாக்கி வருகிறார்கள். தமிழ்நாடு எங்கே போகிறது?*

# ‘தேவதைகள்’ பட்டம் வேண்டாம்

*"தீண்டப்படாத மக்களுக்கு காந்தியார் சூட்டிய பெயர் "ஹரிஜன்"; அதாவது கடவுளின் குழந்தைகள் என்றார்.இந்த அவமதிப்புச் சொல்லை அம்பேத்கர், பெரியார் உள்ளிட்ட அனைத்து முற்போக்கு சிந்தனையாளர்களும் கடுமையாக எதிர்த்தார்கள். அந்தச் சொல் இன்றைக்கு வெறுப்புக்குரிய சொல்லாகவே மாற்றப்பட்டுவிட்டது. இன்று (31.08.2026) சட்டமன்றத்தில் தூய்மைப் பணியாளர் பிரச்சனை எழுந்த போது அதற்கு பதில் அளித்த அமைச்சர் ராஜ்மோகன் தூய்மைப் பணியாளர்களுக்கு "தேவதைகள் " என்று பெயர் சூட்டுகிறார். தேவர்கள் பட்டமோ, தேவதைகள் பட்டமோ இந்த மக்களுக்கு வேண்டாம் ; முதலில் மனிதர்களாக அவர்களை நடத்துங்கள். அவர்களுக்கு வழங்கப்படுகிற ஊதியம் குறைந்தது ஒரு நாளுக்கு 2,000 ரூபாயாவது இருக்க வேண்டும்.*

*அனைத்து ஜாதியினரும் பங்கேற்கும் அரசு வேலையாக அது மாற்றப்பட வேண்டும். பணி நிரந்தரம் ஊதிய உயர்வு போன்ற அடிப்படை கோரிக்கைகள் பற்றி அமைச்சர் ராஜ்மோகன் வாய் திறக்கவே இல்லை. முதலமைச்சரை நேரில் சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்பதில் இவர்களுக்கு என்ன தடை இருக்கிறது?*

*தொழிலதிபர்களும், முதலீட்டாளர்களும் கோட்டு சூட்டு பிரபலங்களும் மட்டும்தான் முதலமைச்சரை சந்திக்க முடியுமா? அதற்கான உரிமை அவர்களுக்கு மட்டும்தான் இருக்கிறதா?*

*எத்தனை கார்கள் இருந்தாலும் அரசு காரில் செல்வது தான் கெத்து என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கெத்து காட்டத் துடிக்கும் ஆட்சியாளர்கள்; அதற்காக பல கோடி ரூபாய் செலவு செய்யத் தயாராக இருக்கும் ஆட்சியாளர்கள்; இந்தத் தூய்மைப் பணியாளர்களுக்கு நியாயமான ஊதியம் வழங்க முடியாதா? பார்ப்பனியமும் மனுதர்மமும் தான் சமூகத்தை இப்போதும் இயக்கிக் கொண்டிருக்கிறது.*

***- விடுதலை இராசேந்திரன்***
***31.08.2026***

# ஜெர்ரி மாண்டரிங்’கில் மறைந்துள்ள ஆபத்து

உலகம் முழுவதும் தொகுதி மறுவரையறையின் போது பாகுபாடான நோக்கத்துடன் எல்லைகளை மாற்றுவதே ஜெர்ரிமாண்டரிங் (*Gerryman -dering*) என்பதன் பொருள். ஆனால் இத்தகைய குற்றச்சாட்டுகளை நிரூபிப்பது மிகவும் கடினமானதாகும். ஏனெனில் அதற்கான சட்ட மற்றும் தொழில்நுட்ப அளவுகோல்கள் மிகவும் சிக்கலானவை.

## உலக அனுபவம்

இந்தியாவிலும், தொகுதி மறுவரையறை ஆணையத்தின் முடிவு இறுதியானது; அதை நீதிமன்றத்தில் கேள்விக்கு உள்ளாக்க முடியாது. நியாயமான மற்றும் பயனுள்ள பிரதிநிதித்துவம் என்பதற்கு என்ன பொருள் என்பது குறித்த நிறுவனரீதியான கட்டமைப்பும் புரிதலும் இல்லை. இதுவே உலகம் முழுவதும் மத அடிப்படையிலான ‘ஜெர்ரி மாண்டரி’ங்கை எதிர்த்து கேள்வி எழுப்புவதில் ஒரு முக்கியமான தடையாக உள்ளது.

அமெரிக்காவில், இன அடிப்படையிலான ஜெர்ரி மாண்டரிங் மூலம் ஆப்பிரிக்க - அமெரிக்க வாக்காளர்கள் ஒதுக்கப்படுவதைத் தடுக்க 1965-ஆம் ஆண்டின் வாக்குரிமைச் சட்டம் (*Voting Rights Act of 1965*) இயற்றப்பட்டது. இன அல்லது மொழிசார் சிறுபான்மையினரின் தேர்தல் பங்கேற்பையும், அவர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பையும் குறைக்கிற எந்த அரசு நடவடிக்கையையும் அந்தச் சட்டம் தடை செய்கிறது. மேலும், சிறுபான்மையினர் பெரும்பான்மை வாக்காளர்களாக உள்ள தேர்தல் தொகுதிகளை உருவாக்குவதை, தொகுதி மறுவரையறை அதிகாரிகளின் சட்டப்பூர்வமான கடமையாக அந்தச் சட்டம் நிர்ணயிக்கிறது.

## இஸ்லாமியர் பிரதிநிதித்துவம் சரிவு

இந்தியாவில் இஸ்லாமியர் நாடாளுமன்ற, சட்டமன்றப் பிரதிநிதித்துவம், அவர்களின் மக்கள்தொகை விகிதத்தைவிடக் குறைவாக இருப்பதாகவும், இது அவர்களிடம் அந்நியப்படுத்தப்பட்ட உணர்வை ஏற்படுத்தக்கூடும் என்றும் தேசிய அரசியலமைப்பு செயல்பாட்டு மறுஆய்வு ஆணையம் (*National Commission to Review the Working of the Constitution, 2002*) தெரிவித்தது. சிறுபான்மையினரிடையே தலைமைத்துவத் திறனை அரசியல் கட்சிகள் வளர்க்கவேண்டும் என்றும், அரசியல் பன்மைத்துவத்தை அரசு வலுப்படுத்த வேண்டும் என்றும் அது பரிந்துரைத்தது. மேலும், தொகுதிகளை மறுவரையறை செய்யும்போது பெரிய அளவிலான பிரதிநிதித்துவ வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க, தொகுதி மறுவரையறை ஆணையத்தின் அமைப்பே சமூகத்தின் பன்முகக் கட்டமைப்பைப் பிரதிபலிக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

இந்திய இஸ்லாமிய சமூகத்தின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலையை ஆய்வு செய்வதற்காகஅமைக்கப்பட்ட சச்சார் குழு (*Sachar Committee, 2006*), தனது அறிக்கையில் இஸ்லாமியர்கள் எதிர்கொள்ளும் நிறுவனமயமாக்கப்பட்ட பாகுபாடுகளையும், அவர்களின்அரசியல் பங்கேற்பு பலவீனப்படுத்தப்பட்டதையும் சுட்டிக்காட்டியது. பலவகையான நடைமுறைகள் மூலம் இஸ்லாமியர்கள் அரசியல் பங்கேற்பிலும்பிரதிநிதித்துவத்திலும் இருந்து விலக்கப்பட்டதாக அந்த அறிக்கை குற்றம்சாட்டியது. இத்தகைய விலக்கம், அந்தச்சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க சமூக-பொருளாதார முன்னேற்ற வாய்ப்புகளை மறுத்துவிட்டதாக சச்சார் குழு சுட்டிக்காட்டி யுள்ளது.

இஸ்லாமியர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட இரண்டு முக்கியமான ஒதுக்கல் முறைகளை அது சுட்டிக்காட்டியது:

1. முதலாவது, இஸ்லாமியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்காமல் விட்டது. இதன் மூலம் அவர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பறித்துவிட்டதாக அறிக்கை கூறியது.

2. இரண்டாவது, இஸ்லாமியர்கள் அதிக அளவில் வாழும் பகுதிகளை “இடஒதுக்கீட்டுத் தொகுதிகள்” (*Reserved Constituencies*) என்று அறிவித்தது. இதன் மூலம் அவர்களின் அரசியல் பங்கேற்பு மறுக்கப்பட்டதாகவும் அறிக்கை சுட்டிக்காட்டியது. இந்த இரண்டு அறிக்கைகளும், நீண்டகாலமாக இஸ்லாமியர்கள் அரசியல் பங்கேற்பிலிருந்தும் பிரதிநிதித்துவத்திலிருந்தும் முறையாக விலக்கப்பட்டு வந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றன.

## அசாம் - காஷ்மீர் கதைகள்

2023ஆம் ஆண்டு, அசாமில் நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளைத் தொகுதி மறுவரையறை ஆணையம் (*Delimitation Commission*) மாற்றி அமைத்தது. தேர்தல் ஆய்வு நிபுணர் யோகேந்திர யாதவ், அசாமில் நடைபெற்ற தொகுதி மறுவரையறையின் போது மதவெறி அடிப்படையிலான ஜெர்ரி மாண்டரிங் (*Communal Gerrymandering*) மேற்கொள்ளப்பட்டதால் இஸ்லாமியர்களின் வாக்கு வலிமை திட்டமிட்டு நீர்த்துப்போகச் செய்யப் பட்டதாகக் குற்றம்சாட்டினார். அசாமில் 126 தொகுதிகளில் 35 தொகுதிகளில் பெரும்பான்மையாக இருந்த இஸ்லாமியர்கள், தொகுதி மறுவரையறைக்குப் பிறகு வெறும் 20 தொகுதிகளுக்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டனர்.

அதேபோல, ஜம்மு-காஷ்மீரில் 2022ஆம் ஆண்டு நடைபெற்ற தொகுதி மறுவரையறையும் காஷ்மீரில் இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவத்தை ஜம்மு பிராந்தியத்துடன் ஒப்பிடும்போது பலவீனப்படுத்தியது. இந்து பெரும்பான்மை கொண்ட ஜம்மு பிராந்தியத்தில் ஆறுஇடங்கள் அதிகரிக்கப்பட்ட நிலையில், இஸ்லாமியர் பெரும்பான்மை கொண்ட காஷ்மீர் பிராந்தியத்திற்கு ஒரேஒரு கூடுதல் இடம் மட்டுமே வழங்கப்பட்டது.

## 14% மக்கள்... வெறும் 4½ % எம்பிக்கள்

நாடாளுமன்றத்தில் இஸ்லாமிய எம்.பி.க்களின் பிரதிநிதித்துவமும் அண்மைக் காலங்களில் சரிவைக் கண்டுள்ளது. 1952ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இஸ்லாமிய எம்.பி.க்களின் பிரதிநிதித்துவம் 5.11 சதவீதமாக இருந்தது; அது 1980ஆம் ஆண்டில் 9 சதவீதமாக உயர்ந்தது. அதன் பின்னர் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்ட நிலையில், 2024ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் அவர்களின் பிரதிநிதித்துவம் வெறும் 4.42 விழுக்காடு மட்டுமே. ஆனால் நாட்டின் மக்கள் தொகையில் இஸ்லாமியர்களின் பங்கு 14 விழுக்காடாக உள்ளது. தற்போதைய நாடாளுமன்றத்தில் சுமார் 18கோடி இஸ்லாமியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது வெறும் 24 இஸ்லாமிய எம்.பி.க்கள் மட்டுமே. மேலும், அனைத்து அரசியல் கட்சிகளும் இஸ்லாமிய வேட்பாளர்களுக்கு வழங்கும் வாய்ப்பிலும் வெளிப்படையான குறைவு ஏற்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டில் 320 இஸ்லாமிய வேட்பாளர்கள் நிறுத்தப்பட்ட நிலையில், 2024ஆம் ஆண்டில் அது 94 ஆகக் குறைந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட 24 இஸ்லாமிய பிரதிநிதிகளில் 21 பேர் இந்தியா கூட்டணியைச் சேர்ந்தவர்கள்; ஒருவர் அசாதுதீன் ஓவைசி- அகில இந்திய மஜ்லிஸ்-இ-இத்தெஹாதுல் முஸ்லிமீன் (*AIMIM*) கட்சியைச் சேர்ந்தவர்கள்; இருவர் சுயேச்சை வேட்பாளர்கள். இதே போல மாநில சட்டமன்றங்களிலும் அண்மைக் காலங்களில் இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவம் குறைந்துள்ளது. தற்போதைய தொகுதி மறுவரையறை வழிமுறையும், நாடாளுமன்றத்தில் இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவத்தை மேலும் குறைத்து மறுப்பதற்கான இன்னொரு முயற்சியாகவே தெரிகிறது; இது வலதுசாரி அரசியலின் நீண்டகால நிகழ்ச்சிநிரலாகும்.

**- பிரண்ட் லைன் 30.4.2026**

# மனுஸ்மிருதி வேண்டாம்- ராகுல்; அது நமது பாரம்பர்யம்-ஆதித்யநாத்

ராகுல்காந்தி பெண்களை அடிமைப்படுத்தும் மனுசாஸ்திரம் ஒழிக்கப்பட வேண்டும்; ஆணாதிக்கத்திலிருந்து பெண்கள் விடுபட வேண்டும் என்றும் பேசினார். இதற்கு பதிலளித்த உ.பி. முதல்வர் ஆதித்யநாத் ‘மனுசாஸ்திரம்’ புனிதமானது; இதை எதிர்த்துப் பேசுவதைக் கண்டிக்கிறேன் என்று பேசியிருக்கிறார்.

புனேயில் நடைபெற்ற தனது நான்காவது ‘சாத்ரோன் கி பி கூஞ்ச்’ (மாணவர் குரல்) நிகழ்ச்சியில் உரையாற்றிய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, *Gen Z* தலைமுறையைச் சேர்ந்த பெண்கள் “ஆணாதிக்க அமைப்பைத் தகர்த்தெறிய வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

*AISSMS* மைதானத்தில் உற்சாகமான வரவேற்புக்கு மத்தியில், மாணவிகளிடம் உரையாற்றிய அவர், “உரக்கப் பேசுங்கள்; பெருமையுடன் நில்லுங்கள்; சமூகத்தில் உங்களுக்கான இடத்திற்காகப் போராடுங்கள்” என்று கூறினார். மராத்தி மொழியில் பேசிய அவர், “புனே என்றாலே அன்பு” (*Pune mhanje prem*) என்றார். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த அவரது உரையில், இளம் பெண்களுடன் பல்வேறு கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. அவர்கள் தங்களது கவலைகள் மற்றும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ராகுல் காந்தியிடம் பகிர்ந்து கொண்டனர். இந்தியாவின் 70 கோடி பெண்கள், நாட்டின் 70 கோடி ஆண்களைவிட முக்கியமானவர்கள் என்று ராகுல் காந்தி கூறினார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சமூகக் கட்டுப்பாடுகள் குறித்து அங்கு உரையாற்றிய ராகுல் காந்தி, "பெண்கள் சிறுவயதில் தந்தையின் கீழும், திருமணத்திற்குப் பின்பு கணவனின் கீழும், கணவனின் மறைவுக்குப் பின்பு மகனின் கீழும் இருக்க வேண்டும் என்ற மனுஸ்மிருதியின் சிந்தனை வெட்கக்கேடானது. இந்த ஆணாதிக்கச் சிந்தனையே பெண்களின் சுதந்திரத்தைப் பறிக்கிறது" என்று சாடினார்.

“மனுஸ்மிருதியின் மறுவருகைக்கு பாஜக தலைமைதான் காரணம்” என்று குற்றம்சாட்டிய அவர், ஜந்தர் மந்தர் போராட்டத்தின்போது இளம் பெண்கள் பயன்படுத்திய தகாத வார்த்தைகளைக் கேட்டு பிரதமர் நரேந்திர மோடி அதிர்ச்சி அடைந்ததாகக் கூறிய காணொளி ஒன்றையும் ஒளிபரப்பினார். பிரதமர் அதனை “கலாச்சார அதிர்ச்சி” என்று குறிப்பிட்டிருந்தார். இதுகுறித்து ராகுல் காந்தி கூறியதாவது:

“ஜந்தர் மந்தரில் ஆண்களும் பெண்களும் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தினர். ஆனால், பிரதமர் பெண்கள் பயன்படுத்திய வார்த்தைகளைப் பற்றி மட்டுமே ‘கலாச்சார அதிர்ச்சி’ என்று குறிப்பிட்டார். இதன் மூலம் தெரிவிக்கப்பட்ட செய்தி என்னவென்றால், ஆண்கள் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்துவது பரவாயில்லை; பெண்கள் பயன்படுத்தக்கூடாது என்பதுதான்.” “ஆண்களுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்; ஆனால் பெண்கள் வீட்டுக்குள் ஒரு கூண்டில் அடைத்து வைக்கப்பட வேண்டும் என்று கருதும் இந்தியாவை நாங்கள் விரும்பவில்லை. எங்களுக்கு நீதி வேண்டும். அனைவரும் மதிக்கப்பட வேண்டும். உங்கள் இதயங்களில் இருக்கும் அச்சம் கூடிய விரைவில் அகற்றப்பட வேண்டும். நீங்கள்தான் இந்த நாட்டின் அடித்தளம்; நீங்கள்தான் அதன் எதிர்காலம்” என்று அவர் கூறினார்.

பெண்கள் வன்முறையின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறார்கள் என்று ராகுல் காந்தி கூறினார். “இந்தியாவில் ஒவ்வொரு 100 பெண்களில் ஆறு பேர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகிறார்கள். இது நேரடியான உடல் ரீதியான வன்முறை வாய்ப்புகளின் மீதான வன்முறையும் உள்ளது. பாதுகாப்பு குறித்த கவலைகளால் 50% பெண்கள் வேலைவாய்ப்புகளை நிராகரிக்கின்றனர். நிதி ரீதியான வன்முறையும் உள்ளது. ஒரு பெண்ணின் பாதுகாப்புக்காக ஆண்டுதோறும் ரூ.17,500 செலவிடப்படுகிறது. எனவே, நம் நாட்டுப் பெண்கள் மீது நேரடி வன்முறை, நிதி ரீதியான வன்முறை மற்றும் வாய்ப்புகளைப் பறிக்கும் வன்முறை என மூன்று வகையான கட்டுப்பாடுகள் உள்ளன” என்று அவர் கூறினார்.

இதற்குப் பதிலடியாக உத்தரப்பிரதேச ரேபரேலியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத், ராகுல் காந்தி இந்தியாவின் பாரம்பரியம், கலாச்சாரத்தை அவமதிப்பதாகக் குற்றம் சாட்டினார். "மனுஸ்மிருதி மற்றும் மனுவைப் பற்றி தவறாகப் பேசுவதற்குப் பதிலாக ராகுல் காந்தி அதர்வன வேதம், சதபத பிராமணம் மற்றும் மத்சய புராணத்தைப் படிக்க வேண்டும். அதில் மனுவின் பங்களிப்பும், இந்திய காலக்கணிப்பு முறையும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது" என்றும் பகிரங்கமாக மனுஸ்மிருதியை ஆதரித்துப் பேசினார். இவர் குறிப்பிட்ட வேதங்களும் புராணங்களும் மனுஸ்மிருதியை விட கேவலமாக பெண்களை இழிவுசெய்கின்றன.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# பாஜகவின் வெற்றியை உறுதிசெய்வதே தொகுதி மறுவரையறை எனும் சூழ்ச்சித் திட்டம்

நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 33வது கூட்டம், 29/8/26 (சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, சென்னை மயிலாப்பூர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு தொகுத்து வழங்கினார்.

"ஜம்மு காஷ்மீர், அசாமில் தொகுதி மறுவரையறை ஏற்படுத்திய பாதிப்புகள்" குறித்து கார்த்தி ராஜேந்திரன், "50 விழுக்காடு தொகுதிகள் உயர்வு தீர்வாகுமா?" எனும் தலைப்பில் சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், தொகுதி மறுசீரமைப்பு ஆபத்துகளையும், பாஜவின் சதிதிட்டம் குறித்தும் ர.பிரகாசு, எழுத்தாளர் தமிழ் காமராசன் விளக்கி உரையாற்றினர். நிறைவாக பேசிய இடதுசாரி செயல்பாட்டாளர் மருதையன் அரசியல் சட்ட அமைப்புகளை சீர்குலைக்கும் அவசர காலத்தில் வாழ்கிறோம் என்று கூறினார். தொகுதி மறுவரையரைத் திட்டத்தின் ஆபத்துகளை விரிவாக விளக்கிப் பேசினார்.

"ஜம்மு காஷ்மீர், அசாமில் தொகுதி மறுவரையறை ஏற்படுத்திய பாதிப்புகள் என்ற தலைப்பில் கார்த்திக் ராஜேந்திரன் உரை:

தொகுதி மறு வரையறை சட்டத் திருத்தத்தை யார் கையில் எடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். இந்த மறு சீரமைப்பு முறையை ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்ய வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. ஆனால் பாஜக அரசு வந்ததற்குப் பிறகு ஏன் இவ்வளவு தீவிரமாக இந்தச் சட்டத்தை அமல்படுத்தத் துடிக்கிறது என்பதுதான் நமக்கு சந்தேகத்தை எழுப்புகிறது. இது ஒரு ஜனநாயக நாடு என்ற அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. ஆனால் பாஜகவைப் பொறுத்தவரை ஜனநாயகம் என்று சொல்லாடலை அதே சட்டதைப் பயன்படுத்தி குறுக்கு வழியாக அதை நீர்த்துப் போகச் செய்பவர்களாகத் தான் உள்ளார்கள். அனைவரும் சமம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நடைபெறும் தேர்தல் முறையையே காலி செய்வது தான் பாஜக உள்நோக்கம். அதை தொகுதி மறுசீரமைப்பு செய்வதன் வழியாக செய்திட பாஜக அரசு திட்டமிட்டுள்ளதாகத் தான் தோன்றுகிறது.

இந்திய மாநிலங்களில் வேறு எங்கேயும் செய்யத் தொடங்காத இந்தத் தொகுதி மறுவரையறையை அசாம் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய இரண்டு மாநிலங்களில் மட்டும் நடைமுறைப்படுத்தியிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. அசாம் மாநிலத்தைப் பொறுத்தவரை அங்கு 126 சட்டமன்றத் தொகுதிகளும், 17 நாடாளுமன்றத் தொகுதிகளும் உள்ளன. அசாமின் மொத்த மக்கள்தொகையில் ஏறத்தாழ 35 விழுக்காடு இஸ்லாமியர்களாக உள்ளார்கள். அசாம் மற்றும் ஜம்மு காஷ்மீர் இந்த இரண்டு மாநிலங்களிலும் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக இருப்பதை திட்டமிட்டு சிதைத்துள்ளனர்.

கடந்த 2026 தேர்தலுக்கு முன்பாக இன்றைக்கு முதலமைச்சராக இருக்ககூடிய 'ஹேமந்த் பிஸ்வாஷ் ஷர்மா' என்ற பார்ப்பனர் ஒரு கூட்டத்தில் பேசியதாவது "36 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிகளை தீர்மானிக்கும் சக்திகளாக இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள், அவ்வாறு இருக்கக்கூடாது, இதை 23-ஆகக் குறைக்க வேண்டும். என்று பேசியுள்ளார். இதற்காக அவர்கள் 3 வழிமுறைகளை பயன்படுத்துகிறார்கள். இது ஏற்கனவே அமெரிக்காவில் உள்ள நடைமுறை.







1. Cracking - இஸ்லாமியர்கள் எங்கெல்லாம் அதிக அடர்த்தியாக இருக்கிறார்களோ அந்தத் தொகுதிகளை உடைத்து பக்கத்து தொகுதியில் அவர்களைச் சேர்த்து இஸ்லாமிய வாக்குகளை சிதறடிப்பது.

2. Packing - இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக இருக்கும் இதர தொகுதிகளில் பிரித்தெடுத்து ஒரே தொகுதிக்குள் கொண்டு வருவது.

3. Stacking - பல்வேறு தொகுதிகளில் சிதறுண்டு கிடக்கும் இந்துக்களை ஒரு தொகுதிக்குள் கொண்டுவந்து அவர்களை பெரும்பான்மையாக மாற்றுவது.

தொகுதி மறு சீரமைப்பிற்குப் பிறகு என்ன நடந்துள்ளது என்பதை அங்குள்ள சமூக ஆர்வலரான யோகேந்திர யாதவ் பின்வருமாறு கூறுகிறார்: "ஒரு பஞ்சாயத்தை மூன்றாக உடைத்து வெவ்வேறு நாடாளுமன்ற தொகுதிகளோடு இணைத்துள்ளனர்." உதாரணமாக, நமது திருவல்லிக்கேணியை ஒரு பஞ்சாயத்தாக எடுத்துக்கொண்டால் அதை மூன்றாக உடைத்து பக்கத்தில் இருக்ககூடிய மூன்று பாராளுமன்ற தொகுதியோடு அந்த மூன்றையும் சேர்த்தால் எப்படி இருக்குமோ அப்படி செய்துள்ளார்கள். இதைச் செய்வதன் வழியாக திருவல்லிக்கேணியில் பெரும்பான்மையாக இருக்கிற இஸ்லாமியர்களின் வாக்குகளைச் சிதறடிக்கச் செய்யலாம்.

தொகுதி மறுசீரமைப்பைப் பொறுத்தவரை கடைசியாக எடுக்கப்பட்ட 2011 மக்கள்தொகை கணக்கீட்டின்படி தான் செய்திருக்க வேண்டும், ஆனால் அசாம் மற்றும் ஜம்மு காஷ்மீர் தொகுதி மறுவரையறையைப் பொறுத்தவரை 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி செய்துள்ளனர். ஏனெனில் 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பை எடுத்துக்கொண்டால் இஸ்லாமியர்களின் ஓட்டு விழுக்காடு அதிகமாக இருக்கும் என்பதால் 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இதைச் செய்துள்ளனர்.

அடுத்து ஜம்மு காஷ்மீரில் 2011 மக்கள்தொகை கணக்கீட்டின்படி மொத்த மக்கள் தொகையில் 28 விழுக்காடு இந்துக்களும், 72 விழுக்காடு இஸ்லாமியர்களும் இருக்கிறார்கள். அங்குள்ள 20 மாவட்டத்தில் 16 மாவட்டங்களில் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். இதில் காஷ்மீரில் முஸ்லிம்கள் அதிகமாகவும் ஜம்முவில் இந்துக்கள் அதிகமாகவும் வாழ்கிறார்கள். காஷ்மீரில் 2024 தொகுதி மறு வரையறைக்கும் முன்னால் காஷ்மீர் பள்ளதாக்கின் தொகுதியின் எண்ணிக்கை 46 ஆகவும் தொகுதி மறுவரையறைக்குப் பிறகு 47 ஆகவும் ஆனது. அதாவது 1 தொகுதி கூடுதலாக கிடைக்கப்பெற்றது. ஆனால் ஜம்முவில் தொகுதி மறுவரையறைக்கு முன்னால் 36 ஆகவும் தொகுதி மறுவரையறைக்குப் பின்னால் 43 தொகுதிகளாக உயர்த்தப்பட்டது. அதாவது 6 தொகுதிகள் கூடுதலாக கிடைத்துள்ளது. ஏனென்றால் காஷ்மீர் பள்ளத்தாக்குகளில் இஸ்லாமியர்கள் அதிகம் இருந்ததால் ஒரு தொகுதி கூடுதலாகவும், ஜம்முவில் இந்துக்கள் அதிகமாக இருந்ததால் ஆறு தொகுதி கூடுதலாகவும் வழங்கப்பட்டுள்ளன.

2002-ல் ஃபரூக் அப்துல்லா தலைமையிலான அரசு "ஜம்மு காஷ்மீர் மக்கள் பிரதிநிதித்துவம் சட்டம் 1957" மற்றும் அரசியலமைப்பு சட்டப் பிரிவு 47(3) திருத்தம் செய்தது. இதன் அடிப்படையில் அங்கும் 2026 வரை தொகுதி மறுசீரமைப்பு பணிகள் செய்யக்கூடாது என நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஜம்மு காஷ்மீரின் சிறப்புரிமைச் சட்டம் 370-யை நீக்கியப் பிறகு அங்கு தங்களது அதிகாரத்தை செலுத்துவதற்கு பாஜக அரசு தயங்கவில்லை. அதன் அடிப்படையில் கடந்த 2022ல் தொகுதி மறுசீரமைப்பு ஆணையம் ஜம்மு காஷ்மீர் பகுதிகளுக்குள் சென்றது. உச்ச நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் அமைந்த இவ்வாணையத்தில், தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா மற்றும் ஜம்மு காஷ்மீர் தேர்தல் ஆணையர் கே.கே. சர்மா ஆகியோர் பதவிவழி உறுப்பினர்களாக இடம்பெற்றிருந்தனர். அரசுக்கு ஆதரவாக செயல்படும் பிரதிநிதிகள் இதற்கு அப்பகுதி மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் மற்றும் சமூக ஆர்வலர்களிடமிருந்து கடும் எதிர்ப்புகள் வந்தபோதிலும் ஆணையம் தொகுதி மறுவரையறைக்கான பணியைச் செய்து முடித்தது. இதனை மார்ச் 14, 2022 அன்று இந்திய அரசிதழ் மற்றும் ஜம்மு காஷ்மீர் அரசிதழ் ஆகியவற்றில் வெளியிட்டது.

லடாக் தனி யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டுள்ள நிலையில் ஜம்மு மற்றும் காஷ்மீர் பள்ளத்தாக்கு ஆகிய இரு பிராந்தியங்களுக்கும் எத்தனை தொகுதிகளை ஒதுக்குவது என்பதைத் தீர்மானிப்பதில் பாஜகவின் பங்கு இருந்துள்ளது. 2011 மக்கள்தொகை கணக்கீட்டின்படி ஜம்மு காஷ்மீரின் 1.25 கோடி மக்களில் 68.8 லட்சம் பேர் காஷ்மீரிலும், 53.8 லட்சம் பேர் ஜம்முவிலும், 2.74 லட்சம் பேர் லடாக்கிலும் வசிக்கின்றார்கள். 87 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப்பேரவையில், இது காஷ்மீர் பிராந்தியத்திற்கு 46 இடங்களாகவும், ஜம்முவிற்கு 37 இடங்களாகவும், லடாக்கிற்கு 4 இடங்களாகவும் இருந்தது. தற்போது இந்த எண்ணிக்கை 90ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இப்படி இந்த இரு மாநிலங்களிலும் உள்ள பெரும்பான்மை இஸ்லாமிய வாக்குகளை சிதறடித்து அவர்கள் தீர்மானிக்கும் சக்திகளாக உள்ள இடங்களிலிருந்து பிரித்தெடுத்து பல்வேறு தொகுதிகளை இணைத்து அவர்களின் சக்திகளைக் குறைத்து அதன் மூலம் அங்கு ஒரு ஹிந்து அரசை கட்டமைக்கும் வேலைத்திட்டமாகதான் இந்தத் தொகுதி மறுவரையறையை அவர்கள் செய்துள்ளார்கள். எனவே இதுபோன்ற நிலை மற்ற மாநிலங்களிலும் குறிப்பாக நம் மாநிலத்தில் வந்து விடாமல் தடுத்திட இதற்கான விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்றார் கார்த்திக் ராஜேந்திரன்.

# சாதனையாளர்களுக்கு விருது

## கோபி ஒன்றியக் கழகத்தின் எழுச்சி விழா

கோபி ஒன்றியம் அளுக்குளி கிளைக் கழகத்தின் சார்பில் சாதனையாளர்களுக்குப் பாராட்டு விழா மற்றும் ஜாதி மறுப்பு திருமணம் புரிந்தவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கும் விழா கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி, மாவட்டச் செயலாளர் செல்வகுமார், திமு கழகப் பொறுப்பாளர் அளுக்குளி தங்கம், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஓ.பி.மாரியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




இராம. இளங்கோவன் வெளியீட்டு செயலாளர் திவிக, வழக்குரைஞர் செகதீஸ்வரன், வேலுச்சாமி தலைமைக் கழகப் பேச்சாளர் திவிக, சுப்பிரமணியம் கொளப்பலூர் கிளை கழகப் பொறுப்பாளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஜாதி மறுப்பு மணம் புரிந்தவர்களுக்கும் மற்றும் கல்வி, அரசுப் பணி, விளையாட்டு துறைகளில் பல்வேறு சாதனைகள் புரிந்த இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுக்கு கழகத்தலைவர் கொளத்தூர் மணி, கோபி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் எஸ்.ஏ முருகன் ஆகியோர் நினைவுப்பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள். நிகழ்வில் கோபி மாவட்டக் கழகத் தோழர்கள் மற்றும் அளுக்குளிப் பகுதி கிராம மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். நிகழ்விற்கான ஏற்பாடுகளை அளுக்குளி பகுதித் தோழர்கள் செய்திருந்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : September 04,2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran